செ. கு. எண்: 190 நாள்:04.09.2020

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 4.9.2020</u>**

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், நரசோதிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. அன்பழகன் என்பவரின் வீடு 3.9.2020 அன்று நள்ளிரவு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின்கசிவினால் ஏற்பட்ட தீ விபத்தில், வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த திரு. அன்பழகன் என்பவரின் மனைவி திருமதி புஷ்பா, திரு. சேட்டு என்பவரின் மகன் திரு. கார்த்திக், திரு. கார்த்திக் என்பவரின் மனைவி திருமதி மகேஸ்வரி, மகன்கள் சர்வேஷ் மற்றும் முகேஷ் ஆகிய ஐந்து நபர்கள் பலத்த தீக்காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ஐந்து நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த செய்தி குறித்து அறிந்தவுடன், உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும் சேலம் மாவட்ட நிர்வாகத்திற்கு நான் உத்தரவிட்டேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**